
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 27 இதழ் - 10 அக்டோபர் 2014

தனிப்பிரதி
ரூ.10/-












"திருமறை தியானம்" தொலைக்காட்சி நிகழ்ச்சி – புதிய DVDக்கள் வெளியீடு



புதிய கைப்பிரதிகள் வெளியீடு

கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி

## கருத்தரங்கில் இன்னும் ஒரு பகுதி ...






எங்களிடம் புதிதாக வெளியிடப்பட்ட
“திருமறை தியானம் தொலைகாட்சி நிகழ்ச்சி”
DVDக்கள் உண்டு. தொடர்பு கொள்ளவும்.

## ஆசானின் அறிவுரையிலே ...


ஆசிரியர் உரை ............. 1

ஏன் நாங்கள் ஞானஸ்நானம்.......... 9

பெண்கள் பகுதி ...................... 14

வாலிபர் பகுதி ...................... 18

சிறுவர் பகுதி ...................... 21

மேகங்கள் சூரியனை ..... .............. 23

கிறிஸ்தவர்களாகிய நாம் ..... 27

கிறிஸ்துவின் மணவாட்டி ..............29

வசன ரீதியான கிறிஸ்துவின் .... 31


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 27 OCTOBER - 2014 Issue - 10**


ஆசிரியர் உரை

# பரலோகக் குடும்பம்

"**பொ**துவாக ஒருவர் ஒரு பெருஞ்செயலைச் செய்யத் திட்டமிடும் போது, அவர் எதற்கு முதலிடம் அல்லது முன்னுரிமை கொடுக்கிறார் என்பது கவனிக்கத்தக்க ஒன்றாக இருக்கும். அப்படி முதலிடமோ அல்லது முன்னுரிமையோ பெற்ற ஒன்று அதன் தன்மையின் அடிப்படையில், பின்னாளில் பேசப்படத்தக்க ஒன்றாகவும், மேற்கோள் காட்டப்படக்கூடிய ஒன்றாகவும் மாறிவிடும். இவ்வுண்மையை அநேகராகிய நாம் நம் அனுபவத்தில் அறிந்தவர்களாகவே உள்ளோம். இந்த உண்மையானது குடும்பம் என்ற உன்னத அமைப்பிற்கும் அப்படியே பொருந்துகிறதாக உள்ளது. ஆம், அநந்த ஞானமும், அளவில்லா வல்லமையும் கொண்ட சர்வலோக தேவன், ஆதியிலே உலகத்தைப் படைத்தபோது, அவராலே ஏற்படுத்தப்பட்ட "முதல் அமைப்பு" குடும்பம் தான். ஆதாமை மண்ணினாலே உருவாக்கி, அவன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்டு, அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து ஏவாளை உருவாக்கி அவனுக்குக் கொடுத்து குடும்பத்தை ஆரம்பித்து வைத்தார். இன்றைக்கு உலகில் காணப்படும் எண்ணிலடங்கா அமைப்புகளுக்கு அச்சாரம் குடும்பம் தான்.

குடும்பம் என்பது கணவன், மனைவி மற்றும் பெற்றோர், பிள்ளைகள், இன்னும் அவர்களைச் சார்ந்தவர்கள் சேர்ந்து வாழக்கூடிய ஓர் இடம். இப்படி சம்பந்தப்பட்டவர்கள் ஒரு கூரையின் கீழ் இருக்கிறார்கள் என்று சொல்வதை விட, ஒருபடி மேலே சென்று ஒருவரோடொருவர் இசைந்து, ஒன்றிணைந்து வாழ்கிறார்கள் என்பது தான் சரியானது.

பூலோகக் குடும்பத்திற்கு இந்த விளக்கம் எப்படிப் பொருந்துகிறதோ அது போலத்தான் பரலோகக் குடும்பத்திற்கும். ஆயினும், *இப்பொருளினடிப் படையில் பரலோகக் குடும்பம் இப்பொழுது இல்லை.* நான் இப்படிச் சொல்லும் போது, அப்படியானால் பரலோகக் குடும்பத்தில் ஒற்றுமையும், இசைவும் இருக்காதா என்று கேட்டு விடாதீர்கள். பரலோகக் குடும்பத்தில் இவைகள் இல்லாவிட்டால் வேறு எங்கு இருக்கப் போகிறது? இங்கே நான் சொல்ல வருவது, பரலோகக் குடும்பம் இப்பொழுது ஒன்றிணைந்து இல்லை என்பது தான்.

ஆம், பரலோகக் குடும்பத்தில் இருக்க வேண்டுமென்று தேவன் திட்டமிட்டுள்ள எல்லோரும் இப்போது பரலோகத்தில் இல்லை. தேவன் உட்பட ஒரு பகுதியினர் பரலோகத்தில் உள்ளனர். இன்னொரு பகுதியினர் உயிர்த்தெழுதலுக்காகப் பரதீசில் காத்துக் கொண்டுள்ளனர். இன்னுமொரு பகுதியினர் தேவத் திட்டத்திற்கும், தேவச் சித்தத்திற்கும் ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவானவர் தம் சொந்த இரத்தம் சிந்தி சம்பாதித்த ஒன்றான மெய் சபையில் நீதியும், பரிசுத்தமுமுள்ள பக்தி வாழ்க்கையை மேற்கொண்டு, கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர் (பிலி. 3:20; 1 தெச. 4:16). *இவர்களெல்லாரும் அந்த மகா நாளில் ஒன்று சேரும் போது தான் பரலோகக் குடும்பம் முழுமையடையும்.* பரலோகக் குடும்பம் இப்பொழுது பரலோகத்திலும், பூலோகத்திலுமாகக் காணப்படுகிறது. இந்த உண்மையைத் தான் பவுலடியார் ஆவியின் துணை கொண்டு எபேசியருக்கு இப்படியாக வெளிப்படுத்தியுள்ளார். " *இதினிமித்தம் நான் பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்திற்கும் நாம காரண ராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு* " என்று (எபே. 3:14,15).

வேத வசனங்களின் தூய உபதேசப்படி கிறிஸ்தவனாக வாழும் ஒருவனுக்குப் பரலோகம் என்பது அவன் சிந்தையை சதா ஆட்கொண்ட ஒன்றாக இருக்க வேண்டும். அப்படி இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் இவ்வார்த்தைகயை தேவன் தன் வேதாகமத்தில் " 559 முறை " எழுதித் தந்துள்ளார். பழைய ஏற்பாட்டைப் படித்தாலும், புதிய ஏற்பாட்டைப் படித் தாலும் இந்த வார்த்தை அவன் மனதில் எப்பொழுதும் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்க வேண்டுமென்பது தான் தேவத்திட்டம். ஆனால், இந்த வார்த்தை அப்படியாக இருக்கிறதா என்பது ஒரு மாபெரும் கேள்வியாக தொடர்ந்து இருந்து வருகிறது.

அருமையானவர்களே! பரலோகக் குடும்பத்தில் ஒரு நாளில் நாமும் இணைந்து நம்முடைய நித்தியத்தை மகா ஆனந்தத்தோடு கழிக்க வேண்டுமானால், பரலோகம் பற்றிய புரிந்துணர்வு நமக்குத் தேவை. இந்த அறிவை நாம் முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கு நமக்குப் போதுமான தகவல்கள் கொடுக்கப்படவில்லை. கொஞ்சம் வசனங்களும், யோவானுக்கான வெளிப்பாடும் நமக்கு ஓரளவு இருந்தாலும், அவை களெல்லாம் தேவன் வாசம் செய்யும் பரலோகத்தின், அந்த மகிமையான

இடத்தின் உண்மை நிலையைக் கிரகித்துக் கொள்வதற்குப் போதுமான வைகள் என்று ஏற்றுக் கொள்ள மனம் மறுக்கிறது. பெரும்பாடுள்ள ஸ்திரீ, இயேசு கிறிஸ்துவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாளல்லவா, அது போலத்தான். கொடுக்கப்பட்டுள்ள வசனங்களும், வெளிப்பாடுகளும் பரலோகத்தின் ஓரத்தைத் தொடுவது போலக் காணப்படுகிறது. உண்மை நிலையைப் போய்ப் பார்க்கும் போதுதான், ஒட்டு மொத்தமாக அறிந்து வியக்க முடியும். ஏனென்றால், அது வானத்தையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் வார்த்தைகளினால் வல்லமையினால் உண்டாக்கின தேவன் வாசம் செய்யும் இடமாக இருக்கிறது.

உண்மையில், தேவன் வாசம் செய்யும் பரலோகம் பற்றி எழுது வதற்குக் கை நடுங்குகிறது. ஏடாகூடமாக ஏதாவது சொல்லி விடுவோமோ என்று பயமாக உள்ளது. ஆயினும், பரலோகக் குடும்பத்தில் அங்கமாக மாற நம்மெல்லாருக்கும் ஆசையிருக்கிறபடியால், நாம் அறிந்து கொள்ள வேண்டியவைகளை அறிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது. இப்பூமியில் ஆவியிலும், சரீரத்திலும் எவ்வித பாதுகாப்பும் அற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்குப் பரலோகம் எல்லாவகையிலும் பாதுகாப்பான ஓர் இடமாக இருக்கப் போகிறது. எப்படியெனில், ஏதேன் தோட்டம் துவங்கி, மனுக்குலத்தை மோசம்போக்கி, தன்னுடைய மகுடியின் சத்தத்திற்கு ஏற்ப ஆட்டம் போட வைத்த சாத்தானின் வஞ்சக வேலைகள் எதுவும் அங்கு இருக்காது. யோவானுக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளின் ஊடே வரும் இவ்வசனத்தைக் கவனியுங்கள். "*மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப் படுவார்கள்*" (வெளி. 20:10). சாத்தானுடைய வஞ்சகம் அங்கே இருக்காது என்ற இந்த ஒன்று போதாதா பரலோகத்தை நாம் வாஞ்சிப்பதற்கு!

சரி இப்பொழுது பரலோகத்தின் தன்மை பற்றிய சில உண்மை களையும், அங்கே யார் இருக்கப் போகிறார்கள் என்கிற புரிந்து கொள்ளு தலையும், அது யாருக்கெல்லாம் கிடைக்கும் என்கிற போதனைகளையும் அறிந்து கொள்ள முயற்சிப்போம்.

## I. பரலோகக் குடும்பம் எப்படிப்பட்டது?

பரலோகக் குடும்பம் பற்றிய நம்முடைய பாடத்தில், முதலாவது அதன் தன்மை பற்றி அறிந்து கொள்ள முயற்சிப்போம்.

இங்கே ஒன்றை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். பரலோகக் குடும்பம் எப்படியாக இருக்கும் என்ற முழு விவரிப்பை வெளிக் கொணர என்னால் முடியாது. ஆயினும், வெளிப்படுத்தப்பட்ட கொஞ்சத்திலிருந்து சிலவற்றைப் புரிந்துகொள்ள விழைகிறோம் அவ்வளவு தான்.

**a) பரலோகக் குடும்பம் உண்மையான ஓர் இடம்**

தேவன் வாசம் செய்யும் பரலோகத்தை நம்ப மறுத்தவர்கள் எல்லாக் காலத்திலும் இருந்து வந்துள்ளார்கள். இயேசுவின் நாட்களில் பரிசேயர்கள் உயிர்த்தெழுதலை நம்பாதவர்களாக இருந்தனர். நம்முடைய நாட்களில் நாத்திகர்கள் இன்னும் ஒருபடி மேலே சென்று கடவுள் என்று ஒருவர் இல்லவே இல்லை என்று வாதிடுகின்றனர். ஆயினும், இருக்கின்ற ஒன்றை எத்தனை பேர் கூடி இல்லை என்று சொன்னாலும் அது இல்லாமல் போய் விடாது.

பரலோகக் குடும்பத்தின் உண்மைத் தன்மையை வேதாகமம் விசுவாசத்தோடு இணைத்து வைத்திருக்கிறது. ஆம், இப்பூலோக வாழ்க்கையை முடிக்கும் வேளை நெருங்கின போது இயேசுவானவர் தன் சீடர்களிடம் பரலோகக் குடும்பமாகிய பிதாவின் வீட்டைக் குறித்துப் பேசினார். அப்படிப் பேச எத்தனித்த போது, முதலில் அவர்கள் மனதில் விசுவாசத்தை ஊன்றக் கட்டுகிறார். கவனியுங்கள் " .... *தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு* " என்று பேசியுள்ளார். (யோவான் 14:1,2). அதாவது, விசுவாசம் பற்றி முதலில் கூறிவிட்டுத்தான் பிதாவின் வீடு பற்றிக் குறிப்பிடுகிறார். ஆக, பிதாவின் வீட்டை உண்மை என்று ஏற்றுக்கொள்வதற்கு விசுவாசம் தேவை. விசுவாசம் இங்கே அடிபடு மானால் பிதாவின் வீடு அதோ கதிதான். இக்காரியத்தில் உங்கள் விசுவாசம் எப்படிப்பட்டது?

**b) பரலோகக் குடும்பம் ஓய்வுக்கான ஓர் இடம்**

நிழலின் அருமை வெயிலில் தான் தெரியும் என்பது போல, ஓய்வின் அருமை உழைப்பவர்களுக்குத் தான் புரியும். உழைப்பு என்பது ஒரு வேலையாகவோ அல்லது ஒரு பிரயாணமாகவோ இருக்கலாம். களைப்பு ஏற்படும் போது ஓய்வு தேவை. யாக்கோபின் கிணற்றண்டை இரட்சகராகிய இயேசு ஒரு சமயம் தன்னுடைய பிரயாணக் களைப்பிற்கு ஓய்வு எடுத்தார் என்று பார்க்கிறோம் (யோவான் 4:6). ஓய்விலே மனிதனுக்கு இருக்கும் நாட்டத்தை தேவன் அறிந்தவராகவே இருந்தார். ஆகவேதான், எகிப்தில் ஓய்வு ஒழிச்சலின்றி வேலை செய்த தன் ஜனங்களை விடுதலையாக்கி வந்த தேவன், அவர்களுக்கு ஓய்ந்திருக்கும்படியாக ஒரு நாளைக் கொடுத்தார் (யாத். 20).

இளைப்பாறுதலின் அவசியத்தை அறிந்த இயேசுவானவர் மனுக்குலத்துக்கான தன்னுடைய அழைப்பில் ஓய்வைச் சேர்த்துக் கொண்டார். "*வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்;*

*அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்* " என்று. (மத். 11:28,29). இந்த இரண்டு வசனங்களில் இரண்டு இளைப் பாறுதல்கள் சொல்லப்பட்டிருக்கிறது. (1) பாவ வாழ்க்கையிலிருந்து (2) பாரமான உலக வாழ்க்கையிலிருந்து.

கோணலும், மாறுபாடுமான சந்ததி வாழும் இப்பூமியில் மெய் கிறிஸ்தவனாக ஒருவன் வாழ்ந்து, தன் ஆத்துமாவைக் கறைபடாமல் காத்துக் கொள்வது மிகவும் சவாலானது. சோதனைகளையும், பாடு களையும், இழப்புகளையும் தவிர்க்கவே முடியாது (2 கொரி. 10:13). அப்படித் தனக்காக பாடுகளோடு வாழ்பவர்களுக்கு இளைப்பாறுதல் தேவை என்பதை தேவன் அறிந்திருந்தார். " *பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழித்து இளைப்பாறுவார்கள்....*" (வெளி. 14:13). ஆகவே பரலோகத்தை ஓர் இளைப்பாறும் இடமாக உண்டாக்கி வைத்திருக்கிறார்.

**c) பரலோகக் குடும்பத்தில் கண்ணீர் இல்லை**

இப்பூமியின் வாழ்க்கையில் கண்ணீருக்குத் தப்பினவர்கள் ஒருவருமே இல்லை. பாடுகளும், பாரங்களும், வேதனைகளும், துயரங் களும், கைமீறிப் போகும்போது வெளிப்படுவது தான் கண்ணீர், அவ்வப் போது கண்ணீர் சிந்துபவர்களும் உண்டு. காலமெல்லாம் கண்ணீர் சிந்து பவர்களும் உண்டு. கண்ணீர் வாழ்க்கை மனுக்குலம் முழுமைக்கும் பொதுவானது. கிறிஸ்தவர்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல. பரலோகம் பற்றிய விவரிப்பு வெளி. 20,21 அதிகாரங்களில் மிக நேர்த்தியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகளில் நம்மைத் தொடக்கூடிய ஒன்று 21:4 ல் இடம் பெற்றுள்ளது. அவர்களுடைய " *கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்* " என்பது. *கண்ணீரைத் துடைப்பேன் என்றில்லாமல்,* "*கண்ணீர் யாவையும் துடைப்பேன்* " என்றுள்ளதை நாம் கவனிக்கத் தவறி விடக்கூடாது. கண்ணீரினால் காலத்தையே கழித்துக் கொண்டி ருக்கும் நமக்கு இது எவ்வளவு பெரிய விடுதலை பாருங்கள்.

சரி, இப்படிக் கண்ணீர் யாவையும் துடைக்கப் போகிறவர் யார்? யாருடைய கரங்கள் கண்ணீர் யாவையும் துடைக்கும்? வானத்தையும், பூமியையும் வார்த்தையின் வல்லமையினாலே உண்டாக்கின சர்வ வல்ல தேவனுடைய கரங்கள் கண்ணீர் யாவையும் துடைத்துப் போடும். ஆம், பரலோகக் குடும்பத்தில் கண்ணீர் இருக்கவே இருக்காது. கண்ணீருக்கான எவ்வித முகாந்தரத்திற்கும் அங்கு இடமே இல்லை. கண்ணீரே இல்லாத ஒரு குடும்ப வாழ்க்கை வேண்டுமா? வேண்டாமா?

இவை மாத்திரமல்ல, பரலோகக் குடும்பம் ஒரு மேலான இட மாகவும் (எபி. 10:34; 11:16), பூமியிலிருந்த குடும்பம் போலில்லாமல் ஒரு புதிய இடமாகவும் (வெளி. 21:1-2). குற்றங்கள் அற்ற நகரமாகவும், அலங் கரிக்கப்பட்ட மணவாட்டியாகவும் இருக்கப் போகிறது. இப்படிப்பட்ட ஒரு பரலோகக் குடும்பத்தில் அங்கமாகி என்றென்றும் தேவாதி தேவனோடு வாழ உங்களுக்கு ஆசையில்லையா?

## II. பரலோகக் குடும்பத்தில் யாரெல்லாம் இருப்பார்கள்?

பரலோகக் குடும்பம் பற்றிய நம்முடைய பாடத்தில், இரண்டாவதாக நாம் அறிந்துகொள்ள விரும்புவது, அங்கே யாரெல்லாம் இருக்கப் போகிறார்கள் என்பது.

ஓரிடத்திற்கு ஒருவன் போக விரும்புவதற்கான காரணங்களில் ஒன்று அங்கே போனால் யாரைப் பார்க்க முடியும் அல்லது யாருடன் இருக்க முடியும் என்பது. இதனடிப்படையில் தான் ஓரிடத்திற்குப் போவதற்கான ஆசையும், முயற்சிகளும் அமையும். ஆகவே, பரலோகக் குடும்பத்தில் யாரெல்லாம் இருப்பார்கள் என்று தெரிந்து கொள்வோம்.

### a) பரலோகக் குடும்பத்தில் தேவன் இருப்பார்

முதலாவது, பரலோகத்தில் சர்வ வல்ல தேவன் இருக்கிறார். ஒரு சமயம் சாலமோன் ராஜா ஏறெடுத்த மன்றாட்டில் தேவன் இருக்கும் இடம் பற்றிக் குறிப்பிடுகிறார். " *உமது அடியானும், இந்த ஸ்தலத்திலே விண்ணப்பஞ் செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபத்தைக் கேட்டருளும் பரலோகமாகிய வாசஸ்தலத்திலே அதை நீர் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக* " (1 ராஜா 8:30). இந்த ஒரு வசனம் மட்டுமல்ல, இன்னும் பல வசனங்கள் தேவன் பரலோகத்தில் இருக்கிறார் என்று கூறுகிறது. பரலோகக் குடும்பத்தில் தேவாதி தேவனோடு வாசம் செய்யும் பாக்கியம் கிறிஸ்தவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது (வெளி. 7:15).

பூலோக வாழ்க்கையிலிருந்து நாம் அவரோடு ஜெபத்தின் மூலம் தொடர்பு கொள்ள முடியும். ஆயினும் அவைகள் அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குத்தான். ஆனால், பரலோக குடும்பத்தில் ஐக்கியமாகி விட்டால் எவ்வித தடையுமின்றி என்றென்றும் அவரோடு வாசம் செய்ய முடியும்.

### b) பரலோகக் குடும்பத்தில் இயேசு இருப்பார்

இரட்சகராகிய இயேசுவைப் பற்றிய காரியங்களைப் படிக்கும் போதும், கேட்கும்போதும், தியானிக்கும்போதும் அடடா அவரை நேரில் பார்க்கும்படியான வாய்ப்பு, அவருடைய போதனைகளை நேரில் கேட்கும் படியான பாக்கியம், அவருடைய வல்லமைகளைப் பெற்று அனுபவிக்கும் படியான சிலாக்கியம் கிடைக்காமல் போய்விட்டதே என ஏங்குவது இயல்பானதே. இயேசு தாமே அவர் வாழ்ந்த நாட்களில் வாழ்ந்தவர்கள் பாக்கியவான்கள் என்று குறிப்பிடுகிறார் (மத். 13:16,17) ஆனால், இப்படிப்பட்ட பாக்கியம் கிடைத்தவர்களைக் காட்டிலும் அவருக்கு உண்மையாக இப்பூமியில் வாழ்பவர்கள் இதைவிட மேலான பாக்கியத்தைப் பரலோகில் என்றென்றும் அனுபவிக்க இருக்கிறார்கள். (1 தெச. 4:17) எபி. 12-ன் படியும், இன்னும் அநேக வசன ஆதாரங்களின்படியும் இயேசு பரலோகத்தில் பிரவேசித்து, பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்பதை அறிந்து கொள் முடியும்.

**c) பரலோகக் குடும்பத்தில் பரிசுத்த ஆவியானவர் இருப்பார்**

பரலோகக் குடும்பத்தில் பிதாவாகிய தேவனோடு, இரட்சகர் இயேசுவோடு, தேவத்துவத்துள் மூன்றாமவராகிய பரிசுத்த ஆவியான வரும் இருக்கப்போகிறார். தாவீது அரசன் தன் சங்கீதங்களின் ஒன்றில் இவ்விதம் குறிப்பிட்டுள்ளார். " *உம்முடைய ஆவிக்கு மறைவாக நான் எங்கே போவேன்?. உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்* " (சங். 139:7,8) என்று. ஆக, இன்னும், பரலோகத்தில் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் சாட்சியிடுகிறார்கள் என்று யோவான் அப்போஸ்தலன் கூறுகிறார் (1 யோவான். 5:7) ஆக, பரிசுத்த ஆவியானவரும் பரலோகத்தில் இருக்கப் போகிறார்.

கிறிஸ்தவத்தில் மிக மோசமாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பவர் பரிசுத்த ஆவியானவர் தான். அவரைப் பற்றிய காரியங்களை அவரவர் தங்கள் சக்திக்கேற்ப சித்தரித்துப் பேசி வருகின்றனர். அவரைப் பற்றிய அனைத்து இரகசியங்களுக்கும், பரலோகக் குடும்பத்தில் நாம் பங்காளி களாக மாறும் போது முடிவு வரும். பரிசுத்த ஆவியானவரை மையமாக வைத்துப் பரப்பப்படும் அனைத்துத் தவறான உபதேசங்களும் அப்பொழுது மாயமாய் மறைந்து போகும்.

இவர்கள் தவிர, தேவதூதர்களும், (மத். 18:10) எல்லாக் காலங் களிலும் வாழ்ந்த நீதிமான்களும், பரிசுத்தவான்களும் (2 ராஜா 2:11). அங்கே இருக்கப் போகிறார்கள். நம்முடை அபிமானத்தையும், மரியாதை யையும் பெற்ற தேவமனிதர்கள் எல்லோரையும் அதாவது, நோவா, யோபு, ஆபிரகாம், மோசே, தாவீது என்று எல்லோரையும் நாம் பரலோகக் குடும்பத்தில் காண முடியும். அது எவ்வளவு ஆனந்தமான அனுபவமாக இருக்கும் என்பதை உங்கள் கற்பனைக்கே விட்டு விடுகிறேன்.

**III. பரலோகக் குடும்பத்தில் அங்கமாகும் பாக்கியம் யாருக்கு?**

பரலோகக் குடும்பம் பற்றிய நம்முடைய பாடத்தில் மூன்றாவதாக நாம் புரிந்து கொள்ள வேண்டியது அங்கே யாரெல்லாம் அங்கமாக முடியு மென்பது.

முதலில் நாம் பார்த்த இரண்டு காரியங்களும் பரலோகக் குடும்பம் பற்றி நாம் அறிந்தும், தெரிந்தும் கொள்ள வேண்டியவைகள். ஆனால், இந்த மூன்றாவது கருத்து நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றை நாம் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால் அதன் பலனும், விளைவும் நன்றாக இருக்காது. முதல் இரண்டு கருத்துக் களை நாம் கவனித்த போது, பரலோகக் குடும்பத்தில் ஒரு நாளில் அங்கமாக வேண்டுமென்ற வாஞ்சை கண்டிப்பாக நமக்கு ஏற்பட்டிருக்கும். உங்களுக்கு எப்படியோ, எனக்கு அந்த ஆசை முன்னெப்போதும் இல்லாத

அளவு அதிகரித்துள்ளது. இப்பூமியின் பாடுகள் இனி வேண்டாம் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது.

ஆனால், ஓர் உண்மையை நாம் இங்கே கனகச்சிதமாகப் புரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆம், பரலோகக் குடும்பத்தில் அங்கமாவது நம்முடைய விருப்பம் சார்ந்த ஒன்றாக இல்லாமல், நம் பக்திநெறி சார்ந்த ஒன்றாக இருக்கிறது. தேவன் வாசம் செய்யும், கண்ணீரில்லாத அந்த இடத்தில் பிரவேசிக்க, தேவனுடைய வார்த்தைகளுக்கு முற்றிலும் கீழ்ப் படிவதும், தேவ சித்தத்திற்கு சமூலமாக நம்மை ஒப்புக்கொடுப்பதும் அவசியமாயிருக்கிறது. ஆசைப்படும் எல்லோருக்கும் பரலோகத்தைத் தாரைவார்க்க அவர் அநீதியுள்ள தேவனல்ல. மகா பரிசுத்தமான பரலோகம் பரிசுத்தக் குலைச்சலாக்கப்பட அவர் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்.

பரலோகக் குடும்பத்தில் அங்கமாக அவருடைய வார்த்தைகளைக் கைக்கொள்வது அவசியம் (யோவான் 14:23). இரட்சகராகிய இயேசு வானவர் இவ்வுண்மையை மலைப்பிரசங்கத்தில் அழுத்திக் கூறியுள்ளார். " *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை*" என்று. (மத். 7:21) தொடர்ந்து இப்பகுதியை நாம் கவனிக்கும் போது " *நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ...*" என்று இரண்டு முறை குறிப்பிட்டுள்ளார். (மத். 7:24,26) ஆக, பரலோகக் குடும்பத்தில் பிரவேசிக்க அவர் சொல்லியுள்ள வார்த்தை களின்படி செய்வது அவசியம்.

அப்படியானால், அருமையானவர்களே, பரலோகக் குடும்பத்தில் அங்கமாக ஆசைப்படும் நாம் ஒவ்வொருவரும் புதிய ஏற்பாட்டின் உபதேசப்படி நம் கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளோமா? சொல்லுங்கள். நம்முடைய அழைப்பு (2 தெச. 2:14). நம்முடைய இரட்சிப்பு (யோவான் 3:5; மாற்கு 16:15,16), நம்முடைய நீதி (மத்தேயு 5:20; வெளி. 19:8) நம்முடைய மறுரூபம் (ரோமர் 12:1,2) நம்முடைய ஆராதனை (யோவான் 4:24), நம்முடைய பரிசுத்தம் (1 பேதுரு 1:15) ஆகிய அனைத்தும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை அடிப்படை யாகவும், ஆதாரமாகவும் கொண்டிருக்கிறதா? சிந்திப்போம் !!.

அன்பானவர்களே, பரலோகக் குடும்பத்தில் அங்கமாகும் பாக்கியம் போகிற போக்கிலும் அல்லது நாம் நினைக்கின்ற பிற தகுதிகளினடிப்படை யிலும் அல்லது கிறிஸ்தவ உலகம் அங்கீகரித்திருக்கிற விதவிதமான வழி முறைகளிலும் நமக்கு வாய்த்து விடாது என்பதைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்து, அதற்கேற்றதோர் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் தீர்மானித்து, கிறிஸ்துவின் உபதேசக் கோட்டுபாடுகள் அனைத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுப்போமாக! ஆமென்!!

# ஏன் நாங்கள் ஞானஸ்நானம் பெறுகிறோம்?



**Bro. J.C. சோட்**

**ஞா**னஸ்நானம் ஒரு வேதாகம பாடம். எனவே, நாம் வேதாகமத்திற்குச் சென்று திருமுழுக்கு என்னவென்பதையும், அதன் நோக்கத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் கண்டுபிடிக்க வேண்டும்.

வேத வசனாங்களுக்கு நாம் போகும்போது, தன் ஊழிய நாட்களில் ஞானஸ்நானம் கொடுத்த யோவான் என்னும் ஒரு மனிதர் பற்றி வாசிக்கிறோம். இவர் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்தபடியால் யோவான் ஸ்நானகன் என்று அழைக்கப்பட்டி ருக்கிறார். மத்தேயு 3:1-6 வசனங்களில் நாம் இப்படியாக வாசிக்கிறோம். *"அந்நாட்களில் யோவான் ஸ்நானகன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று ஏசாயா தீர்க்கத்தரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே. இந்த யோவான் ஒட்டக மயிர் உடையைத் தரித்து தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும், காட்டுத் தேனும் அவனுடைய ஆகாரமாயிருந்தது. அப்பொழுது எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தாரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப் புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்"*. மறுபடியும் நாம் யோவான் 3:23,-ல் இப்படியாக வாசிக்கிறோம். *" சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானம் கொடுத்து வந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்"*

யோவானின் ஊழியத்தை நாம் தொடர்ந்து பார்க்கும்போது, அவர் இயேசுவுக்கே ஞானஸ்நானம் கொடுத்ததாக வாசிக்கிறோம். *"அப்பொழுது, யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவரிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதி*

*யுத்திரமாக; இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது "* (மத்தேயு. 3:13-17).

இப்போது, யோவானின் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் என்ன? யோவான் கிறிஸ்துவுக்கு முன்னோடி. கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி அனுப்பப்பட்டவர். இவருக்கு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த மக்களிடத்தில் ஞானஸ்நானத்தை அறிமுகப்படுத்தும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது; இவர் இப்படிச் செய்ததால் கிறிஸ்துவுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் ஞானஸ்நானம் பற்றி போதிக்க எளிதாக அமைந்தது. யோவானின் ஞானஸ்நானம் இயேசுவின் நாமத்தில் செய்யப்படவில்லை அல்லது கொடுக்கப்படவில்லை. எனவே, அதற்கு பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தம் இல்லை. எனவே தான், பவுல் எபேசு பட்டணத்துக்கு வந்து அங்கே யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்த மக்களிடம், பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள், பின்பு, கிறிஸ்து அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பது சம்மந்தமான சத்தியத்தைப் போதித்த பிறகு அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 19:1-5). அதன் பொருள், யோவானின் ஞானஸ்நானம் கிறிஸ்துவின் மரணம் வரை நீடித்தது என்பதே. அதன் பின்பு, கிறிஸ்து போதித்த ஞானஸ்நானம் நடைமுறைக்கு வந்தது.

கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் தான் பரமப் பிதாவிடம் திரும்பிச் செல்வதற்கு முன்பாக இயேசு அப்போஸ்தலர்களைப் பார்த்து, *" நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் "* என்று சொன்னார் (மாற்கு 16:15,16). மத்தேயு ஆசிரியர் இப்படிச் சொல்கிறார். *" ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் "* என்றார். (மத்தேயு 28:19,20). மேற்

சொல்லப்பட்ட வசனங்கள் தான் " *பிரதான கட்டளை* " என்றழைக்கப் படுகிறது. இந்தக் கட்டளை கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்கின்ற நற்செய்தியாகிய சுவிசேஷத்தை உல கெங்கும் எடுத்துச் செல்வதைக் குறிக்கிறது. அதில் பிரசங்கிக்க வேண்டிய சில குறிப்பிட்ட நிபந்தனைகளும் இருந்தன. குறிப்பாக, கிறிஸ்துவில் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் போன்ற நிபந்தனைகள் இருந்தன. இதுபோன்ற கட்டளைகளுக்கு ஒருவர் கீழ்ப்படிவதன் மூலமாகத்தான் இரட்சிக்கப்பட முடியும். கிறிஸ்து சொன்னதைக் கவனியுங்கள். "*விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசி யாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* " (மாற்கு 16:16).

ஞானஸ்நானம் இரட்சிப்பின் நிபந்தனைகளுடன் ஒன்றாக இருக்கிறது. 1பேதுரு 3:21 ல் " *ஞானஸ்நானம் இரட்சிக்கிறது* " என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் இந்த வசனமோ அல்லது வேதாகமத்தில் வேறு எந்த வசனமோ ஞானஸ்நானம் மாத்திரம் இரட்சிக்கிறது என்று போதிக்கவில்லை. ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாகச் செய்ய வேண்டிய கடைசி நிபந்தனையாக ஞானஸ்நானம் இருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் முழுவதையும் நாம் வாசிக்கும் போது ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதை நாம் கவனிக்க முடியும். ஒவ்வொரு மனமாற்ற சம்பவத்திலும் ஜனங்கள் தேவனுடைய வார்த்தை, பிரசங்கிக்கக் கேட்டிருக்கிறார்கள், அதை விசுவாசித்திருக் கிறார்கள், ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். பல மனமாற்றச் சம்பவங் களில் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந் திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டது நேரடியாகவும், மறைமுகமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், விசுவாசம் உண்டாக தேவனு டைய வார்த்தை பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று போதிக்கின்ற தேவனு டைய வார்த்தைகள் இருக்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தை நாம் வாசிக்கும் போது, பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் திரளான ஜனங்களுக்குப் பிரசங்கித்தார்கள். அதைக் கேட்ட பிறகே அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் 16:30-ல் சிறைச் சாலைக்காரன் பவுலையும், சீலாவையும் பார்த்து, ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். அதற்கு பவுலும், சீலாவும் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி" என்று சொன்னார்கள். ஆனால், இந்த மனிதன் விசுவாசிப்பதற்கு அவனுக்கு கிறிஸ்துவைப் பற்றி எதுவும் தெரியாது. இங்கே, இந்த மனிதனுக்கும், அவன் குடும்பத் தாருக்கும் பிரசங்கமே தீர்வாயிருந்தது. அது முடிந்த பிறகு, அவர்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து ஞானஸ்நானம் பெற்றார்கள். அடுத்ததாக, அப்போஸ்தலர் 2:38-ல் அந்த ஜனங்கள் அவர்கள் என்ன

செய்ய வேண்டும் என்பதை அறிய விரும்பினார்கள். அவர்கள் மனந் திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவார்கள் என அவர்களுக்குச் சொல்லப்பட்டது (அப். 2:38). அவர்கள் ஏற்கனவே சுவிசேஷம் பிரசங்கிக்கக் கேட்டு அதை விசுவாசித்திருக்கிறார்கள் (அப். 2:37), ஆனால், வேறு எதையாவது செய்ய வேண்டுமா என அறிய விரும்பினார்கள். இப்போது அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

அடுத்ததாக, அப்போஸ்தலர் 8:29-39 வசனங்களில், எத்தியோப்பியாவிலிருந்து வந்த மந்திரியின் மனமாற்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது. பிலிப்பு கிறிஸ்துவை அவருக்கு எப்படி பிரசங்கித்தார் என வேத வசனம் சொல்கிறது. அவர்கள் தண்ணீரண்டை வந்தபோது, அந்த எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்பினான். பிலிப்பு மந்திரியிடம் முழுமனதோடு விசுவாசித்தால் அப்படிச் செய்ய முடியும் என்று விளக்கினார். அதற்கு மந்திரி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று பதிலளித்தான் (அப். 8:37). பின்பு பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். கடைசியாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள எல்லா மனமாற்றச் சம்பவங்களிலும் கர்த்தருக்குக் கீழ்ப் படிய விரும்பியவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்று காண முடியும். நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று ஜனங்களுக்குச் சொல்லப்பட்டதை நாம் வாசிக்கிறோம். அப். 8-ம் அதிகாரத்தில் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பத்தாம் அதிகாரத்தில், கொர்நேலியும் அவன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப். 9 மற்றும் 22-வது அதிகாரங்களில், சவுல் எப்படி கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார் என்று வேத வசனம் நமக்குச் சொல்கிறது. அங்கே அவன் எழுந்து, பாவங்கள் போகக் கழுவப்பட ஞானஸ்நானம் பெறும்படி சொல்லப்பட்டது. அப்போஸ்தலர் 16 ஆம் அதிகாரத்தில் சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டாரும் இராத்திரியிலே அந்நேரத்திலே தானே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

ஞானஸ்நானம் ஓர் அடக்கம் என்று நமக்குப் போதிக்கப்பட்டிருக் கிறது. பவுல் இப்படிச் சொன்னார். " *ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந் தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே*

*அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்*" (கொலோ. 2:12) ரோமர் 6:3,4 வசனங்களையும் வாசியுங்கள். அங்கே, ஞானஸ்நானம் தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் என்று வேத வசனம் சொல்கிறது. பிலிப்பு அந்த எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்த போது, தண்ணீருக்குள் அழைத்துச் சென்று, தண்ணீரிலிருந்து வெளியே அழைத்து வந்தார் (அப். 8:29-39). ஞானஸ்நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் வரச்செய்கிறது (ரோமர் 6:3,4; கலாத். 3:26,27). ஞான ஸ்நானம் ஒருவரை சபைக்குள்ளாக்குகிறது (I கொரி. 12:13). யோவான் 3:3-5 வசனங்களில், ஒருவர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்று வாசிக்கிறோம். இங்கே தண்ணீர் என்பது ஞானஸ்நானத்தையும், தேவனுடைய ராஜ்யம் என்பது கர்த்தருடைய சபையையும் குறிக்கிறது. அச்சமயத்தில் ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, ஒருவர் அதில் பிரவேசிக்கக் கூடாதிருந்தது. ஆனால், கிறிஸ்து விரைவில் வரப் போகிற ஒன்றைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். இன்று நிச்சயமாகவே ஒருவர் சபையில் பிரவேசிக்க ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும். இதன் பொருள், ஒருவன் இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்க்கப்பட ஆவியின் வார்த்தைகளைக் கொண்ட வேதாகமத்திலுள்ள சுவிசேஷத்தின் கட்டளை களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

நாம் ஏன் ஞானஸ்நானம் பெறுகிறோம்? நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என இயேசு கட்டளை யிட்டிருக்கிறார். எனவே, நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம். இது கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு அடையாள மாயிருக்கிறது. இது பற்றி ரோமர் 6 ஆம் அதிகாரத்தில் வாசிக்க முடியும். அதாவது, கிறிஸ்து சிலுவையில் மரித்தார், நாம் நம்முடைய பாவங் களுக்கு மரிக்க வேண்டும். கிறிஸ்து உண்மையான கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார், நாம் தண்ணீரில் ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம் பண்ணப்படுகிறோம். கிறிஸ்து கல்லறையிலிருந்து அதாவது, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவராய், கல்லறையையும், நரகத்தையும், மரணத்தையும் ஜெயித்து வெளியே வந்தார், நாம் தண்ணீரிலிருந்து வெளியே வரும் போது பாவமன்னிப்புடன், புதிய சிருஷ்டியாக, புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளும்படிக்கு வெளியே வருகிறோம். எனவே, நாம் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதினால் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் போன்றவற்றை விசுவாசிக்கிறோம் என்று சொல்கிறோம்.

வேதாகம போதனையின்படி ஞானஸ்நானம் பெற்று விட்டீர்களா? இல்லையென்றால் நீங்கள் இந்தக் காரியங்களைத் தொடர்ந்து படித்து, கர்த்தருக்குக் கீழ்ப்படிய துரிதமாக முடிவு எடுப்பீர்கள் என்ற நம்பிக்கை யுடன் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

பெண்கள் பகுதி

# " ஒரு பெண் மனைவியாகும் போது அவள் வீட்டை உருவாக்குகிறாள் "

Sis. R. R. NAYAGAM

திருமணமும், வீட்டு வேலையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டது.



அவைகள் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்துள்ளது. அவைகளைப் பிரிக்க முடியாது. நாம் ஒரு மனிதனை விவாகம் பண்ணும்போது, அவனுக்காக ஒரு வீட்டை உருவாக்க வேண்டும் என்ற பொறுப்பு நமக்கு இயல்பாகவே வந்து விடுகிறது. வீட்டை உருவாக்குதல் என்பது உலகத்தில் ஓர் உயர் தரமான வேலை. எந்த ஒரு பெண்ணும் இதைக் குறித்து வெட்கப்படக் கூடாது. இந்த இடத்திற்காகத் தேவன் அவளைக் குறித்துள்ளார். இங்கு தான் அவள் தன் திறமையை வெளிக்கொணர முடியும். இதுதான் அவளுக்கு மேலான இடம்.

வீட்டை உருவாக்குதல் பற்றிப் பேசும்போது சரீரப்பிரகாரமான காரியங்களைப் பேசாமல் விட்டுவிட முடியாது. சரீரப்பிரகாரமானவைகள் நல்ல முறையில் இருந்தால்தான் ஆவிக்குரிய விஷயங்களை அதிக அளவில் உயர்த்திக் கொள்ள முடியும். சரீரப்பிரகாரமானவைகள் என்று பார்க்கும் போது நல்ல, கடினமான, உண்மையான வேலைகள் ஆகும். வீட்டைப் பராமரிப்பதில் முதல்படி வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதாகும். நம்முடைய வீட்டைப் பிரகாசமாகவும், அழகாகவும், மகிழ்ச்சி பொங்கும் வகையில் வைத்துக் கொள்ள வேண்டும். கணவன்மார்கள் பரபரப்பான தங்கள் வேலையிலிருந்து வரும்போது, நாம் நம்முடைய வேலைகள் எல்லாம் முடிந்துள்ளதா என்று பார்த்துக் கொண்டு, அவருக்கு சுத்தமான ஒரு தோற்றத்தைக் காட்டின பின்பு அவரோடு சில நேரங்களை செலவழிக்க வேண்டும்.

மனைவியானவள் தன் வீட்டை நேர்த்தியாகவும், ரசனையாகவும் வைக்க கடமைப்பட்டுள்ளாள். தட்டுமுட்டு சாமான்கள் எவ்வளவு விலை அதிகமானது என்பது இங்கு முக்கியமல்ல. மாறாக, அவைகள் எவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டு அதினதின் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பது தான் முக்கியம்.

அமைப்பாளர் என்ற வார்த்தை ஒருவேளை நமக்கு பிடிக்காமல் இருந்தாலும் நல்ல ஒரு வீட்டை உருவாக்க நாம் சிறந்த அமைப்பாளர் களாக இருக்க வேண்டும். திடீரென்று இந்தக் காரியத்தைச் செய்து விட முடியாது. இது அதிகமான, கடின வேலைகள், திட்டமிடுதல், அமைத்தல் போன்றவற்றை உள்ளடக்கியது.

ஒரு நல்ல வீட்டை உருவாக்குபவர் ஒரு சிறந்த வரவு செலவுகள் பார்ப்பதில் அறிவுள்ளவராக இருக்க வேண்டும். ஒருவேளை இதில்தான் மற்றவற்றைக் காட்டிலும் அதிக சிக்கல்கள் வரும். தன் கணவனின் வருவாய்க்குள் வாழக் கற்றுக்கொள்ளாதவள் முட்டாள் ஸ்திரீயாகவும் தன் கணவனின் அதிசீக்கிர மரணத்திற்குக் காரணமுமாகிறாள். ஆனால், தேவனுடைய திட்டப்படி இந்த விஷயத்தில் நாம் நம் கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டும்.

தங்கள் வருமானத்திற்குள்ளாக வாழும் ஒரு மனைவி தன் கணவனுக்கு ஒரு விலைமதிப்புள்ள வெகுமதியாக திகழ்கிறாள். தேவனுக்குப் பயப்படும் ஒரு மனைவியின் நேர்மறை குணநலன்களை பார்த்தோம். இனி ஒரு மனைவி எப்படி இருக்கக் கூடாதென்று சில உதாரணங்கள் மூலம் பார்க்கலாம்.

**ஒரு மனைவி மற்ற காரியங்களுக்கு தன் கணவனை விட முதலிடம் தரக்கூடாது**

ஒரு திருமணத்தின் அடிப்படைக் கருவிகளே கணவனும், மனைவியும் தான், கணவன் தலைவனாகவும், மனைவி அவனுக்கு துணையாகவும் தான் இருக்க வேண்டுமேயொழிய எந்த ஒரு காரியமும் இந்த உறவு முறைக்கு கெடுதலாக வந்து தேவனின் திட்டத்தை உருக்குலைந்து போகும்படி செய்துவிடக் கூடாது. மனைவியானவள் எந்த ஒரு காரியத்தையும், யாரையும் தன் கணவனுக்கும் மேலாக வைத்து விடக்கூடாது. அப்படி ஒரு செயலாவது அல்லது வேறு ஒரு நபராவது கணவன் மனைவி உறவுக்கிடையில் வந்தால் அதைக் கண்டறிந்து உடனே அதைக் களைந்து போட்டு பழைய நிலைக்கு வந்து விட வேண்டும். ஏனென்றால், தேவ திட்டத்தை நாம் அழித்து விடக்கூடாது.

**ஒரு மனைவி சந்தேகப்படுகிறவளாக இருக்க கூடாது**

கிறிஸ்தவத் திருமணங்களில் சந்தேகத்திற்கே இடமிருக்கக்கூடாது. தன் மனைவியை நம்புகிற ஒரு கணவன் அந்த நம்பிக்கைக்குத் துரோகம்

செய்து விடுவாளோ என்று நினைக்க வேண்டிய அவசியமில்லை. தன் கணவனில் அன்புகூருகிற ஒரு மனைவி அவனுடைய வார்த்தையிலோ, செய்கையிலோ, சந்தேகப்படத் தேவையில்லை. சந்தேகம் என்பது ஒற்றுமையின்மை, குழப்பம், துயரம் இவைகளைக் கொண்டு வருவதுடன் கிறிஸ்தவக் குடும்பம் என்ற அந்தஸ்தையே இழக்கச் செய்கிறது. சரியான நம்பிக்கையும், அன்பும் இருக்குமானால் அங்கு சந்தேகத்திற்கே இடமிருக்காது.

**ஒரு மனைவி குற்றங்கண்டு வசைபாடுகிறவளாகவும், சச்சரவு பண்ணுகிறவளாகவும் இருக்கக் கூடாது**

பல சமயங்களில் மனைவிகளின் வசைபாடுதல், சண்டை சச்சரவு செய்தல் போன்ற காரியங்களால், தன் கணவன் தன்னைத் தேற்றி ஆதரிக்கிற மற்ற கரங்களை அடைக்கலமாகக் கருதி சென்றுவிட வாய்ப்பு வந்து விடுகிறது. ஏனெனில், " சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடி யிருப்பதைப் பார்த்திலும் வீட்டின்மேல் ஒரு மூலையில் தங்குவதே நலம் " (நீதி. 19:13). " மனைவியின் சண்டைகள் ஓயாத ஒழுக்கு " (நீதி. 19:13).

சிம்சோனின் வாழ்க்கையில் சிம்சோனின் பெலம் எதினால் உண்டாயிருக்கிறது என்று அறிய விரும்பி தொடர்ந்து அவனை தொந்தரவு செய்து கொண்டேயிருந்தாள். " இப்படி அவனைத் தினம் தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு" (நியாயாதிபதிகள் 16:16) என்றுள்ளது. அவன் சாகத்தக்கதாய் அவனிடம் வசைபாடிக் கொண்டே யிருந்தாள். அவனின் பலம் எதில் இருக்கிறது என்பதை தெரியும் வரை நச்சரித்தாள். இது நமக்கும் ஒரு பாடமாக அமையும்.

**ஒரு மனைவி தன் கணவனின் குடும்பத்தாரை கோபித்துக் கொள்ளக்கூடாது**

ஒரு பெண் ஒரு வாலிபனை விவாகம் செய்யும் போது அவனுடைய குடும்பத்தையும் தன்னோடு சேர்த்துக் கொள்ள ஒத்துக் கொள்கிறாள். தன் கணவன் தன்னுடன் எவ்வளவு நெருக்கமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாளோ அதே போல் இவளும் அவர்களுள் ஒருத்தியாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தான் நேசித்து, தன் கணவனாக ஏற்றுக்கொண்டவர் அவருடைய பெற்றோரின் வரவில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தன் கணவனை இப்படி உருவாக்கி தனக்குக் கொடுத்த அந்தப் பெற்றோருக்கு நன்றியாக இருக்க வேண்டும். பெண்களின் குணநலன்கள் நீதி. 3ம் அதிகாரத்தில் பட்டியல் போட்டுக் காட்டப்பட்டுள்ளது. பிள்ளைகளும் எழுந்து அவளைப் பாக்கியவாதி

என்பார்கள். தன் கணவன் தன்னைப் புகழ்வதைக் காட்டிலும் ஒரு பெண்ணுக்கு கிடைக்கும் வெகுமதி உலகில் வேறு எதுவுமில்லை. நம்முடை நல்ல வாழ்க்கையானது. இந்த உலகில் ஒரு முழுமையான, சௌகரியமான வாழ்விற்காக மட்டுமல்லாது நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கும், நம்முடைய கணவன், பிள்ளைகள் இவர்களின் இரட்சிப்புக்கும் ஏதுவாக இருக்கும்.

நாம் நம்முடைய வழிகளை ஆராய்வோம், நம்முடைய குறிக் கோளை ஆராய்வோம். நம்முடைய வீட்டை கட்டிக் கொண்டுள்ளோமா? அல்லது வீட்டை அழித்துக் கொண்டுள்ளோமோ? திருமணமான ஒவ்வொரு பெண்ணும் அவசியம் நீதி. 14:1-ம் வசனத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும். " *புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்*". நாம் கட்டுகிறோமா? இடிக்கிறோமா முடிவு நம்முடையது. நாம் என்ன செய்யப்போகிறோம்? " மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையான தைக் கண்டடைகிறான். கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்ளுகிறான் (நீதி. 18:22). நம்மைப் பார்த்து நம்முடைய கணவனும் பிள்ளைகளும் மகிழும்படியாக நாம் வாழ வேண்டும்.

## *வெற்றிக்கான ஐந்து ஆலோசனைகள்*

1. நாளின் முதல் மணி நேரத்தை தேவனுக்குக் கொடுங்கள்
2. வாரத்தின் முதல் நாளை தேவனுக்குக் கொடுங்கள்
3. உங்கள் சம்பளத்தின் முதல் பாகத்தை தேவனுக்கு கொடுங்கள்.
4. உங்கள் ஒவ்வொரு தீர்மானத்திலும் தேவனுடைய ஆலோசனைக்கு முதலிடம் கொடுங்கள்.
5. உங்கள் இதயத்தில் தேவனுக்கு முதலிடத்தைக் கொடுங்கள்.

வாலிபர் பகுதி

# உற்சாகத்திற்கு உலை

சகோ. பென்னி மார்ட்டின்

பிரியமான வாலிபக் கண்மணிகளே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பல நேரங்களில் நாம் கிறிஸ்துவுக்காக அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று உற்சாக மிகுதியால் உரக்கச் சொல்கிறோம். ஆனால், சில மணி நேரங்களிலேயே அவ்வார்த்தைகள் காற்றில் கரைந்துபோகின்றன. உலகக் கவலைகள், குடும்ப அழுத்தங்கள் மற்றும் பல பொருளாதார பிரச்சனைகள் நம் உற்சாகத்தை நிலை குலையச் செய்துவிடுகின்றன. ஆனால், இச்சாக்குப் போக்குகளைத் தேவன் ஏற்றுக்கொள்வாரா? இல்லை. நிச்சயமாகவே ஏற்றுக் கொள்ளமாட்டார். பல வாலிபர்கள் சினிமா, விளையாட்டு போன்ற காரியங்களில் உத்சவ உத்வேகத்துடன் ஈடுபடு கிறார்கள். ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும் போது உற்சாக மற்றுக் காணப்படுவதை நம்மால் காண முடிகிறது. தேவனுக்காக நாம் செய்ய வேண்டிய காரியங்களை உற்சாகமாகச் செய்யவிடாமல் தடுக்கும் காரணிகளை நாம் இனி அலசி ஆராய்வோம்.

## I தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதை மறந்துவிடும் போக்கு

தேவன் தமது பலத்த கரங்களினால் எகிப்தின் அடிமைத்தனத்தி லிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து, வனாந்திர மார்க்கமாய் கானான் தேசத்தை நோக்கி அவர்களை வழிநடத்தின போது அவர்கள் கானான் தேசம் எப்படிப்பட்டது என்பதை வேவு பார்ப்பதற்காகப் பன்னி ரெண்டு பேரை அனுப்பினார்கள். அதில் யோசுவாவும், காலேப்பும் மட்டுமே அத்தேசத்தைத் தங்களால் சுதந்தரித்துக் கொள்ள முடியும் என்கிற நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள். இவர்கள் இருவரும் தேவனிடத்தில் பக்தி வைராக்கியமாயிருந்தார்கள். கானான் தேசத்தை வேவு பார்க்கப் போன மற்ற பத்துப்பேருக்கும், இவ்விருவர்களுக்குமிடையே இருந்த ஒரே வித்தியாசம் தேவனுக்கான பக்தி வைராக்கியம் தான். மற்ற பத்துப் பேரும் தேவன் எவ்வளவு பெரியவர் என்று பார்ப்பதை விட்டு விட்டு, தங்கள் சத்துருக்கள் எவ்வளவு பெரியவர்கள் என்பதைப் பார்த்தார்கள். நம் கவனம் தேவன் எவ்வளவு பெரியவர் என்பதிலிருந்து, நம் பிரச்சனைகள் எவ்வளவு பெரியது என்பதற்குத் திரும்பினால் தேவன் மீதான நம் உற்சாகம் குன்றிப் போய் விடும். தேவனுடைய காரியங்களில் நம் உற்சாகத்தை அதிகப்படுத்த தேவனுடைய வல்லமையை,

தேவனுடைய வார்த்தையின் வல்லமையை நினைவில் கொள்ள வேண்டும் (ரோமர் 1:16). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு இருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (மத்தேயு 28:20).

## II தேவனை விட மனிதனுக்கு அதிகம் பயப்படும் போக்கு

இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் எகிப்துக்குச் செய்ததை நினைத்துப் பார்க்கத் தவறினார்கள். அவர்கள் தேவனுக்குப் பயப்படுவதை விட கானான் தேசத்திலிருந்த சத்துருக்களுக்கு அதிகமாகப் பயந்தார்கள். நாமும் கூட பல நேரங்களில் நம் பெற்றோர்களுக்கு, நம் முதலாளிகளுக்கு தேவனை விட அதிகமாகப் பயப்படுகிறோம். அதன் விளைவு தலைக் குனிவு தான். நாம் மனிதர்களுக்குப் பயப்படும் போது தேவனுக்காக உற்சாகமாகச் செயல்பட முடியாது. வேத வசனங்களில் நாம் பார்க்கும் போது சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம் என்றும், தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக் கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே என்றும் விவரிக் கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 10:28; பிரசங்கி 12:13) மனித பயம், நாம் தேவனுக்கடுத்த காரியங்களில் உற்சாகமாக ஈடுபட தடையாகயிருக்க ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. இன்றைய நாட்களில் பெரும்பாலான வாலிபர்கள் தேவ பயமில்லாமல் தாறுமாறான வாழ்க்கை வாழ்கிறார்கள். நாம் அவர்களிடம் போய் நீதி, நியாயம், நியாயத்தீர்ப்பு என்று பேசினால் அவர்கள் அதை வேற்றுக்கிரக வார்த்தை போல் எண்ணி நம்மை ஏளனம் செய்கிறார்கள். இவ்வுலகத்தில் நடந்து கொண்டிருக்கும் அல்லது அரங்கேற்றப்படும் அநீதிகளுக்கெல்லாம் காரணம் தேவ பயமில்லாமை தான். நாம் தேவனைப் பற்றும் பயத்தோடு இவ்வுலகில் வாழ்ந்தால் சந்தோஷமும், சமாதானமும் உண்டாகும் நம் ஆயசு நாட்களும் பெருகும்.

## III தேவனுடைய கடந்த கால ஆசீர்வாதங்களை மறக்கும் மனப்போக்கு

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் எகிப்தின் அடிமைத்தனத் திலிருந்த போது எப்படித் தம்முடைய பலத்த கரத்தினால் அவர்களை விடுவித்து, போஷித்து, அவர்கள் தங்கள் சத்துருக்களை மேற் கொள்ளும் படி செய்தார் என்பதையெல்லாம் மறந்துவிட்டார்கள். அதுதான் அவர்கள் தேவனுக்கடுத்த காரியங்களில் உற்சாகமில்லாமல் இருப்பதற்குக் காரண மாயிருந்தது. நம்முடைய உற்சாகமின்மைக்கும் அதுவே காரணமாக அமைகிறது. நமக்கு நடக்கும் நன்மைகள் எல்லாவற்றிற்கும் ஆதாரம் தேவன் தான். நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1:17). நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகள் ஏராளம், தாராளம். ஆனால், அந்த நன்மைகளுக்கு நாம் பாத்திரமாக நடந்து கொள்கிறோமா? உலகப் பிரகாரமாக நாம் பார்த்தால் கூட அரசாங்கத்திடமிருந்து நன்மைகள் பெறும் பயனாளிகள் சில

தகுதியம்சங்களுக்கு உட்பட வேண்டியதாயிருக் கிறது. அரசு விதிக்கும் அந்த தகுதியம்சங்களுக்கு ஒருவர் உட்படும் போது மட்டுமே அந்த நன்மை களைப் பெற்றுக் கொள்ள முடியும். தேவனுடைய நன்மையான ஈவுகளை நாம் நினைத்துப் பார்த்து அவருக்கடுத்த காரியங்களில் நாம் உற்சாகத் தோடு செயல்படவில்லையென்றால் நன்றி கெட்டவர்களாயிருப்போம். இந்த நன்றி கெட்ட இஸ்ரவேல் ஜனங்கள் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை நோக்கி தேவனால் வழி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது எகிப்தில் அவர்கள் புசித்த ஆகாரங்களை நினைத்துப் பார்த்தார்கள். ஆனால், ஆளோட்டிகளால் அடக்கப்பட்டதை, அடிக்கப்பட்டதை மறந்து போனார்கள். நாமும் கூட இவ்வுலகம் தரும் அற்ப சந்தோஷத்திற்காக தேவன் தரும் நித்திய ஜீவனை இழந்து போகிறோம் அப்படி நாம் செய்யலாகாது.

அருமையான வாலிபர்களே! நீங்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்ய பக்தி வைராக்கியமாயிருந்து ராஜ்ய விரிவாக்கப் பணியில் உற்சாகத்துடன் இருக்கிறீர்களா? தேவன் நம் சத்துருக்களோடல்ல நம்மோடு தான் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் மனித பயத்தை உதறித் தள்ளிவிட்டு தேவ பயத்தோடு செயல்படுவோம். தேவன் நமக்குக் கடந்தகாலங்களில் செய்த நன்மைகளை நினைத்து அதற்கு நன்றியாய் இருக்க வேண்டும். பிசாசு நம் உற்சாகத்திற்கு உலை வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு நம் பாதையில் பல தடைகளைக் கொண்டு வருவான். நாம் அத்தடைகளை தகர்த்தெறிந்து தேவ காரியங்களில் நம்மை முழுமையாக ஈடுபடுத்துவோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் அபரிதமாக ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## அறுவடை

நேர்மையை விதைத்தால், நம்பிக்கையை அறுப்பீர்கள்

தாழ்மையை விதைத்தால் மேன்மையை அறுப்பீர்கள்

விடாமுயற்சியை விதைத்தால் திருப்தியை அறுப்பீர்கள்

நன்மையை விதைத்தால் நண்பர்களை அறுப்பீர்கள்

கடின உழைப்பை விதைத்தால் வெற்றியை அறுப்பீர்கள்

மன்னிப்பை விதைத்தால், ஒப்புரவாகுதலை அறுப்பீர்கள்

சிறுவர் பகுதி



# ஆவியின் கனி அன்பு

**Bro. ABEL R. NAYAGAM**

பிரியமான சிறுதம்பி, தங்கைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த இதழின் மூலம் உங்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவரும் சுகமாக இருக்கிறீர்களா? உங்கள் பள்ளிக் காரியங்கள் அனைத்தும் சீராக இருக்குமென்று நம்புகின்றேன்.

குழந்தைகளே! உங்களில் அநேகருக்கு ஆவியின் கனிகளைப் பற்றி தெரிந்திருக்கும் என நினைக்கிறேன். ஞாயிறு பள்ளிகளில் அதைக் கற்றிருப்பீர்கள். ஆம், கலாத்தியர் 5:22,23-ல் கூறப்பட்டுள்ள ஒன்பது ஆவியின் கனிகளைப் பற்றித் தான் பேசுகிறேன்.

சரி, அந்த ஒன்பது கனிகள் பற்றி மாதம் ஒவ்வொன்றாக நாம் கற்றுக் கொள்வோம். முதலாவது கனி என்ன? ஆம், அன்பு! அன்பைக் குறித்து இம்மாதம் தெரிந்து கொள்ளலாமா?

தேவனைப் பற்றி நாம் கூறும்போது அநேக சமயங்களில் அவரை அன்புள்ள தேவன் என்று கூறுவோம். அப்படித்தானே? சில பாடல்களில் கூட அன்புள்ள தேவன் என்று பாடுவோம். ஆம், அன்பு என்பது தேவனுடைய குணாதிசயங்களில் மிக முக்கியமான ஒன்று.

உங்களிடம் அன்பு இருக்கிறதா? சரி வாருங்கள் பார்க்கலாம்! அன்பின் மகிமையை 1 கொரி 13 ம் அதிகாரத்தில் பவுல் அழகாக விளங்குகிறார். நாம் எல்லாரிடமும் அன்பாக இருக்க வேண்டும். தேவன் எப்படி நம்மீது அன்பாக இருக்கிறாரோ அப்படியே நாமும் பிறரிடம் அன்பாக இருக்க வேண்டும். ஒருவரோடும் சண்டையிடாமல், கோபம் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து நம் எதிராளிகளிடம் கூட நாம் அன்புகாட்டி சிநேகமாயிருக்க வேண்டுமென்று கூறுகிறார். எனவே, நாம் அனைவரிடமும் அன்பாக நடந்துகொள்ள வேண்டும். பக்கத்து விட்டுக் குழந்தைகளிடமும், பள்ளியில் கூடப் படிக்கின்ற மாணவர்களிடமும் நாம் கோபம் கொள்ளவோ, சண்டை போடவோ கூடாது.

நாம் தேவன் மீதும் அன்பாய் இருக்க வேண்டும். எப்படி தேவனிடம் அன்பாய் இருப்பது? நாம் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தால் அவரிடம் அன்பாக இருக்கிறோம் என்று அர்த்தம். தேவனுடைய வார்த்தை குழந்தைகளுக்கு என்ன கூறுகிறது? எபே 6:1 ல்

பெற்றாருக்குக் கீழ்ப்படியச் சொல்கிறது. மத்தேயு 5:37 ல் உண்மையை மட்டுமே பேசச் சொல்கிறது. மத்தேயு 7:12 மற்றவர்களை நேசித்து அன்பு கூர வேண்டும் என்றும் சொல்கிறது. இப்படி அநேக அறிவுரைகளைப் பிள்ளைகளுக்கு வேதாகமம் கூறுகிறது. நாம் இனிமேல் அன்புள்ள பிள்ளைகளாய் இருக்கலாமா?

இதைக் கடைபிடித்தீர்கள் என்றால் தேவன் மீது நீங்கள் அன்பாயிருப்பீர்கள்! உங்களிடம் அன்பு என்ற ஆவியின் கனி மிகுதியாய் இருக்கும் தானே!

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!!

## மருத்துவ ஆலோசனை (மூட்டு வலி)

- மூட்டு வலி என்பது 40 வயதிற்கு மேலானவர்கள் அதிகமாகச் சொல்லும் ஒரு பிரச்சனையாக மாறிவிட்டது.
- மூட்டுவலி - பொதுவாக மருத்துவர்களிடம் அதிகம் காட்டப்படாமல், மருந்துக் கடைகளில் இருப்பவர்களால் பார்க்கப்பட்டு வருகிறது.
- பெரும்பாலான மூட்டு வலிகளில், முட்டி வலி தான் (முழங்கால்) அதிகமாக இருக்கிறது.
- மூட்டு வலிக்கு காரணங்கள் பல உண்டு.
- சில மூட்டு வலிகள் (ஆஸ்டியோ ஆர்த்ரைட்டிஸ்) உடற்பயிற்சியின் மூலம் அல்லது அறுவை சிகிச்சையின் மூலம் குணமாக்க முடியும்
- ஆனால், ருமடாய்ட் ஆர்த்ரைட்டிஸ் என்ற மூட்டு வலிக்கு வாழ்நாள் முழுவதும் மருந்து உட்கொள்ள வேண்டும். இதை இரத்தப் பரிசோதனை மற்றும் எக்ஸ்ரே மூலம் மட்டுமே வித்தியாசப்படுத்த முடியும்.
- நீங்கள் மூட்டு வலிக்கு மருந்து கடைக்குச் சென்றால். அங்கு பெரும்பாலும் வலி / வீக்கம் குறைவதற்கு மாத்திரையைக் கொடுத்தாலும் அது முழுமையான வைத்தியம் அல்ல.
- அவர்கள் தரும் சில மருந்துகளின் பக்கவிளைவு மூட்டுவலியை விட மோசமான பிரச்சனைகளைக் கொண்டு வந்துவிடும்.

(தொடரும்)

Dr. ஏபில் நாயகம், CMC வேலூர்.

# மேகங்கள் சூரியனை மறைக்க முடியாது; சாத்தானால் கிறிஸ்துவின் சபையை மறைக்க முடியாது.

**E.Z. செல்வநாயகம்**

உலகத் தோற்றம் முதல் மனுக்குலத்தை அழிவுப் பாதையில் தடுத்து நிறுத்துவார் இன்றி நடத்திச் சென்று கொண்டிருந்த சத்துருவாகிய சாத்தான், முதன் முறையாக சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோல்வியைத் தழுவ நேரிட்டது. கர்த்தராகிய இயேசு தமது ஊழியத்தைத் தொடங்கும் முன்னர் வனாந்தரத்தில் சோதனைக்காரனோடு மோதி, அவனுடைய போராயுதங் களின் அடிப்படை என்று கருதப்படுகிற கண்களின் இச்சை, மாமிசத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றைத் தகர்த்தெறிந்தார். இதுவே அவனுக்கு மரண அடியாக அமைந்துவிட்டது. அப்பொழுது புற முதுகு காட்டி ஓடிப்போன சாத்தான் பலரைத் தூண்டிவிட்டு, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைச் சீர்குலைக்க முயற்சிகள் பல மேற்கொண்டான். ஆனால் தொடர்ந்து தோல்வியையே தழுவினான்.

முதலில் சதுசேயர்கள் என்ற கூட்டத்தாரை ஏவி உயிர்த்தெழுதல் இல்லை என்று மக்களை நம்பவைக்க முயற்சித்தான். அது சிலகாலம் தான். கர்த்தர் தாமே உயிர்த்தெழுந்ததின் மூலம் அந்த வாதத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது. அப்புறம் வேதபாரகர், பரிசேயர் என்ற கூட்டத்தாரை தனது கருவியாகப் பயன்படுத்தி முன்னோர்களின் பாரம்பரியம், ஓய்வுநாள், ஆசரிப்பு மீறல் என்று குற்றம் கூறி மக்களை ஏவி விட்டு ஆண்டவரின் செல்வாக்கைக் குறைக்க முற்பட்டான். அவர்கள் எந்த மோசேயை உயர்த்திப் பேசி மக்களைத் திசை திருப்ப முயன்றார்களோ அந்த மோசேயின் மூலமாக தேவன் கொடுத்த வசனங்களைக் மேற்கோள் காட்டியே அவர்களுடைய வாயை அடைத்தார். தோல்விகள் பொறாமையாக உருவெடுத்து சதிவேலைகளில் இறங்கினான்.

அவருடைய சீடர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவனைப் இயேசுவைக் காட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்து கொலை முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றுவிட்டதாக எண்ணி ஓர் அற்ப திருப்திப்பட்டுக் கொண்டான். ஆனால் உண்மை என்ன? தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற பல்வேறு கால கட்டங்களில் உரைக்கப்பட்ட தீர்க்க தரிசனங்களின்படி தேவனால் நடத்தப்பட்ட தொடர் நிகழ்ச்சிதான் இயேசுவின் சரீர மரணம் என்பதை விளங்கிக் கொள்ள வெகு நாட்கள் ஆகவில்லை. மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே? என்று கேட்டு வெற்றிப் புன்னகையுடன் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து தற்காலிக வெற்றி மயக்கத்தில் மிகுந்த சாத்தானின் முகத்தில் கரி பூசினார். தன் இறுதி ஆயுதமாகிய மரணத்தின் கூர் ஒடிக்கப்பட்டு விட்டதால் நிலை தடுமாறிப்போன சாத்தான், இடிந்துபோய் கொஞ்ச காலம் முடங்கிக் கிடந்தான். உயிர்த்தெழுந்த நாதரின் பெயர் மகிமைப்பட்டது. அவரால் கட்டப்பட்ட சபை உருவாகி வளர்ந்து பெருகியது. கூடவே சாத்தானின் பொறாமையும் வளர்ந்தது.

மீண்டும் ஒரு ரவுண்டு.தோற்றுப் போன சதுசேயர்களையும், பரிசேயர்களையும், ரோம அதிகாரிகளையும் ஆலோசனை சங்கத்தாரையும் கூட்டணி அமைக்கச் செய்து அப்போஸ்தலர்களை மிரட்டிக் காவலில்

போடுவித்தான். பாவம் ஒரு வேலைக்காரப் பெண்ணுக்கு பயந்து கர்த்தராகிய ஆண்டவரை மறுதலித்த சீடர்கள் தானே என்பது அவனுடைய நினைப்பு. இப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பெற்று தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்டவர்கள் என்ற உண்மை அவனுக்குப் புரியவில்லை போலும்!

அதிகாரிகளுடைய மிரட்டலும்,சிறைச்சாலையும் அவர்களுடைய இலட்சிய பயணத்தைத் தடுக்க முடியவில்லை. சிறைச்சாலை அவர்களுக்குச் சொர்க்கமாகத் தோன்றிற்று. அப்.16:25 இரும்புச் சங்கிலிகளும், சிறைக்கட்டுப்பாடுகளும் விலங்குகளும் ஆண்டவருடைய வல்லமைக்கு முன் எம் மாத்திரம்? ஆச்சரியவிதமாக அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அப்.5:19.

ஆனால், ஸ்தேவானைக் கல்லெறிந்து கொல்லும் அளவிற்கு வெற்றி பெற்று விட்டோம் என்று இறுமாந்திருந்தான். என்ன அதிசயம்! ஒரு கோதுமை மணி சாவதினால் பல கோதுமை மணிகள் உண்டாவதைப் போல், ஸ்தேவானுடைய மரணம் சபை வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும்படி தேவன் செய்த ஏற்பாடு என்பதை புரிந்து கொண்ட பின்னர் வெட்கப்பட்டான். அப்.8:4.

அதன்பிறகு மத விஷயத்தில் வைராக்கியம் கொண்டவனும் சிறந்த கல்விமானுமாகிய சவுல் என்ற வாலிபனைப் பயன்படுத்தி சபையை அழித்துவிடத் திட்டமிட்டான். அந்த சவுல் எருசலேமில் வளர்ந்து வந்த சபைக்கு பல துன்பங்களைக் கொடுத்தான். ஈவிரக்கமில்லாமல் பெண்கள் குழந்தைகள் என்றும் பாராமல் கொடுமைகள் பல செய்தான். அதோடு திருப்தியடையாமல், தமஸ்கு பட்டணம் வரை செல்ல விரும்மபி அங்கு கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட மக்களையும் இம்சித்துத் துன்புறுத்தப் புறப்பட்டுச் சென்றான். எதிரியின் வாளைப் பிடுங்கி அவனையே வெட்டி வீழ்த்துவதைப் போன்று எந்த வாலிபனை உபயோகித்து சபையை அழிக்கச் சாத்தான் திட்டமிட்டானோ அதே வாலிபனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள சவுலைச் சந்தித்து ஆட்கொண்டார் (அப். 9:5,6).

தன் அனைத்து முயற்சிகளும் கர்த்தருடைய சபையின் வெற்றிப் பயணத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை என்பதை சாத்தான் புரிந்து கொண்டான். சபை வளர்ந்து யூதர்களை மட்டுமின்றி புற ஜாதி மக்களையும் கவர்ந்து கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்படி செய்தது. கொஞ்சம் குறைய உரோமைப் பேரரசு முழுவதும் சுவிசேஷம் பரவிப் பயன்தந்தது. பெரும்பான்மையான மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்க அந்தப் பொல்லாத சாத்தானால் முடியவில்லை.

இம்முறை தன் சாமர்த்தியத்தையெல்லாம் ஒன்று கூட்டி கள்ளப் போதகர்களை ஏவி, பொய்யின் ஆவியை அவர்களுக்குள் அனுப்பினான். அவர்கள் பற்பல விதமான மாறுபாடான உபதேசங்களை சபைக்குள் ஊடுருவச் செய்தனர். அப்போஸ்தலர்கள் காலத்திலேயே நுழைந்துவிட்ட இக்கள்ளப் போதகம் முதலாம் நூற்றாண்டு இறுதியில் ஆதி அப்போஸ்தலர்கள் மரித்துப் போன பிறகு சற்று வேகமாக வியாபித்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சற்றேறக் குறைய கி.பி. பதினான்காம் நூற்றாண்டு வரையிலும் ஆதிக்கம் செலுத்தி, சாமானிய மக்கள் பரிசுத்த வேதாகமத்தைப் பார்க்க முடியாமலும், சத்திய வசனங்களை கேட்க முடியாமலும் செய்து. வரலாற்று வல்லுநர்கள் இந்தக் கால கட்டத்தை இருண்ட காலம் என்று வர்ணிக்கும் அளவுக்கு நிலைமை மோசமாயிற்று.

இந்தக் கால கட்டத்தில் தான் சபையின் அதிகாரமும் அரசு அதிகாரமும் ஒருங்கிணைக்கப்பட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முழுமனதோடு ஏற்றுக்கொள்ள விரும்பாத மக்கள் கூட இயேசு கிறிஸ்துவின் சீஷத்துவக் கோட்பாடுகளைத் திரித்தும், குறைத்தும் கிறிஸ்தவர்கள் என்று முத்திரை குத்தப் பட்டார்கள். சத்தியத்தோடு சமரசம் செய்து கொண்டு, புறஜாதிகளின் தெய்வங்கள், அவர்களுடைய வழிபாடுகள் தாராளமாய் சபைக்குள் புகுத்தப்பட்டன. இவை களையெல்லாம் கண்டு நியாய உணர்வுள்ள உண்மைக் கிறிஸ்தவர்கள் வெகுண்டு எழுந்து போர்க்கொடி உயர்த்தினர். ஆனால், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பல புரட்சிகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன. மதக் குருக்களும் போப் ஆண்டவர் என்று தங்களை உயர்த்திக் கொண்டவர் களும் அரசர்களைக் கூட ஆட்டிப் படைத்தனர்.

கொடி கட்டிப் பறந்த சாத்தானின் ஆட்சிக்கு முடிவு கொண்டு வர தேவன் வில்லியம் டிண்டேல், மார்டின் லூதர் போன்ற சீர்திருத்தக்காரர்களை எழுப்பினார். அவர்கள் பல இன்னல்களையும், எதிர்ப்புக்களையும் சமாளித்துக் கொண்டு வேதாகமத்தை மக்கள் மொழியில் மொழி பெயர்த்து அச்சிட்டு மக்களே பரிசுத்த வேதாகமத்தைப் படித்து தேவனிடம் நேரடித் தொடர்பு கொள்ள உற்சாகம் ஊட்டினர். பலவிதமான கொடுமைகளுக்கும், அநியாயத்துக்கும் இலக்காக்கப்பட்ட சாமானியர்கள் இச்சீர்திருத்தவாதிகளின் பின்னே அணி வகுத்து நின்றனர். பிசாசின் பிரதிநிதிகளின் கொடுமைகளும், கட்டுப்பாடுகளும் தகர்த்தெறியப்பட்டன. நீண்ட காலம் அரசு ஒச்சிவந்த சாத்தான் மீண்டும் தலை மறைவானான்.

புரட்சித் தீ ஐரோப்பா முழுவதும் பரவி இங்கிலாந்துக்கும் தாவியது. இக்கால கட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் பல்வேறு நாடுகளுக்கும், கண்டங்களுக்கும் வியாபாரத் தொடர்புகள் கொண்டிருந்தனர். அங்கே செல்லும் வியாபாரிகளுடன் கிறிஸ்தவ மிஷினரிகளும் பல்வேறு நாடுகளுக்குச் சென்று கிறிஸ்துவின் உபதேசத்தைப் பிரகடனப்படுத்தினர். இப்படியாகக் கிறிஸ்தவம் உலக நாடுகள் பலவற்றில் பரவிற்று.

சத்திய வேதம் பல மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டு மக்கள் கையில் தாராளமாகக் கிடைக்கும்படி செய்யப்பட்டதின் விளைவாக மக்கள் வேதாகமத்தை தாங்களாகவே படித்து சிந்திக்க ஆரம்பித்தனர். கிறிஸ்தவ உபதேசங்கள் கிறிஸ்தவ வழிபாட்டு முறைகள் அனைத்தும் மாற்றப்பட்டு மனித ஞானத்தால் கறைபடிந்து கிடப்பதைக் கண்டு துணுக்குற்றனர். அநேக சடங்குகள், கிறிஸ்தவ வழிபாட்டு முறைகள் என்று விளம்பரப்படுத்தப்பட்ட ஆராதனை முறைமைகள் யாவும் கிறிஸ்துவின் உயர்ந்த இலட்சியங்கள், உபதேசங்களுக்கு முற்றும் மாறுபாடாயிருந்ததைக் குறித்து கவலையோடு கூட்டங்கூடி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

" வேதம் விளம்பியதை விவரித்துச் சொல்வோம்
வேதம் விளம்பாதவற்றிற்கு உடன்படவே மாட்டோம் "

என்ற கொள்ளை உருவாக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் எதைச் செய்தாலும், பேசினாலும் தேவனுடைய வசனத்தில் அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று தேடிப் பார்க்க ஆரம்பித்தனர். அதன் விளைவாக சபை ஒன்றே என்பதைக் கண்டனர். அது கிறிஸ்து தமது

இரத்தத்தைக் விலையாகக் கொடுத்து வாங்கின கிறிஸ்துவின் சபை என்று தெரிந்து கொண்டனர். இன்றைக்கு உலகம் எங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் கொள்கைகளை கிறிஸ்துவின் தூய உபதேச அடிப்படையில் மாற்றிக் கொள் கின்றனர். பலவிதமான பெயர்ப்பலகைகளை அகற்றிவிட்டு " ஒன்றே சபை, ஒருவரே தலைவர் " என்று கூறிக்கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றர். அதிலே யாருக்கும் வெட்கமோ வஜ்ஜையோ வேண்டியதில்லை சாத்தான் நம்மை வஞ்சித்து விட்டான். அதுதான் உண்மை. கூடாரத் தொழிலாளர்களான ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் மெத்தப்படித்த வேதாகமங்களில் வல்லவனான, பேச்சுத் திறமை கொண்ட அப்பொல்லோவுக்கு காரியங்கள் இப்படி யிருக்கிறது என்று எடுத்துச் சொன்னபோது அவன் தனது கருத்தை மாற்றிக் கொள்ளவில்லையா? (அப்.18:24-28) பின் நமக்கு மட்டும் ஏன் பாரம்பரியப் பெருமை? எல்லாம் தெரியும் என்ற தலைக்கனம்! எபேசுப் பட்டணத்தில் மக்களிடம் நீங்கள் பெற்றுக்கொண்டது சத்தியத்தின்படி தவறான ஞானஸ்நானம் என்று கூறப்பட்ட பொழுது அவர்கள் மீண்டும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லையா? பின் நமக்கு மட்டும் ஏன் பிடிவாதம்? (அப் 19:1-5).

தயவு செய்து வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் (1 தெச. 5:21.) "சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலை யாக்கும்".(யோவான் 8:32).

## தேவனுடைய வார்த்தையின் நன்மைகள்

1. நமது வழிகளைச் சுத்தப்படுத்துகிறது
2. பாவம் செய்யாதபடி நம்மைக் காக்கிறது
3. ஊக்கப்படுத்துகிறது
4. தேவ பயத்தைத் தருகிறது
5. நம்பிக்கை அளிக்கிறது
6. நன்றியுணர்வைத் தருகிறது
7. ஞானத்தைக் கொடுக்கிறது
8. வழி நடத்துகிறது
9. ஜீவனளிக்கிறது

# ஜாமீன் கையெழுத்துப் போடலாமா?

சகோ. பர்னபாஸ்

இன்றைக்கு அநேகர் தங்களுடைய சிநேகிதர்களோ அல்லது தங்களுடைய சொந்தபந்தங்களோ அல்லது அந்நியர்களோ கடன் (வங்கியில் அல்லது தனியார் நிறுவனங்களில்) வாங்கும்போது ஜாமீன் கையெழுத்துப் போடுகிறார்கள்.

கடன் வாங்கியவர்கள் இவர்களை ஏமாற்றி விட்டு ஓடி விட்டாலோ அல்லது கடனைக்கட்டாமல் மரித்து விட்டாலோ ஜாமீன் கையெழுத்துப் போட்டவர்கள் பெரும் கடன் தொல்லையில் சிக்கிக்கொள்ளுகிறார்கள் , அநேகர் இதனால் தற்கொலை கூட செய்து கொள்ளுகிறார்கள்

ஆனால், ஜாமீன் கையெழுத்துப் போட்ட கிறிஸ்தவர்களோ தேவனை நோக்கி கெஞ்சி அழுக்கிறார்கள்

ஆனால், தேவன் இதைக் குறித்து என்ன கட்டளையிட்டு இருக்கிறார் என்பதையும், நமக்கு என்ன ஆலோசனை கொடுக்கிறார் என்பதையும் பார்ப்போம்.

1) தேவனுடைய ஆலோசனை என்னவென்றால் அந்நியனுக்காக பிணைக்கப்பட்டால் (ஜாமீன் கையெழுத்துப் போட்டால்) உங்களுக்கு வெகு பாடு வரும் என்று சொல்லுகிறார். நீதி. 11:15-ல் அந்நியனுக்காகப் பிணைக் கப்படுகிறவன் வெகு பாடுபடுவான், பிணைப்படுவதை வெறுப்பவன் சுகமாயிருப்பான்

2) யார் தான் ஜாமீன் கையெழுத்துப் போடுவார்கள்? பாருங்கள் ஜாமீன் கையெழுத்துப் போடுகிறவர்கள் தேவனுடைய பார்வையில் மதி கெட்டவர்கள் என்கிறார். (நீதி. 17:18) புத்தியீனன் தன் சிநேகிதனுக்கு முன்பாகக் கையடித்துக் கொடுத்துப் பிணைப்படுகிறான்.

3) ஜாமீன் கையெழுத்துப் போட்டு அதில் சிக்கிக்கொண்டவர்கள் கடைசியில் தான் படுத்து இருக்கக் கூடிய படுக்கையைக் கூட கடன் கொடுத்தவர்கள் தூக்கிகொண்டு போய் விடுவார்கள் என்று தேவன் எச்சரிக் கிறார்கள். (நீதி. 22:26) கையடித்து உடன்பட்டு, கடனுக்காகப் பிணைப் படுகிறவர்களில் ஒருவனாகாதே (நீதி. 22:27) செலுத்த உனக்கு ஒன்று மில்லாதிருந்தால் நீ படுத்திருக்கும் படுக்கையையும் அவன் எடுத்துக் கொள்ள வேண்டியதாகுமே.

4) ஒருவேளை ஜாமீன் கையெழுத்துப் போட்டு சிக்கிக் கொண்டால் நாம் என்ன செய்வது? அதற்குத் தேவனுடைய ஆலோசனை என்ன?

**நாம் ஜாமீன் கையெழுத்து போட்டு சிக்கி கொண்டோம்**

நீதி. 6:1 என் மகனே, நீ உன் சிநேகிதனுக்காகப் பிணைக்கப்பட்டு, அந்நியனுக்குக் கையடித்துக் கொடுத்தாயானால் நீதி 6:2 நீ உன் வாய் மொழிகளால் சிக்குண்டால் உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய்.

**நாம் தப்பித்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?**

நீதி. 6:3 இப்பொழுது என் மகனே, உன் சிநேகிதனுடைய கையில் நீ அகப்பட்டுக் கொண்டபடியால், நீ உன்னைத் தப்புவித்துக் கொள்ள ஒன்று செய். (நீதி. 6:4) உன் கண்ணுக்கு நித்திரையும் உன் கண்ணிமைக்குத் தூக்கமும் வரவிட்டாமல், உன் சிநேகிதனிடத்தில் போய் உன்னைத் தாழ்த்தி, அவனை வருத்திக் கேட்டுக் கொள்.

நாம் ஒருவரிடத்தில் ஜாமீன் கையெழுத்துப் போட்டு சிக்கிக் கொண்டால் கண்ணுக்கும் நித்திரை வர விடாமல் கடன் வாங்கியவர் களிடத்தில் போய் நம்மை தாழ்த்தி வருத்திக் கேட்க வேண்டும். அப்போது தான் நாம் தப்பித்துக் கொள்ள முடியும்.

நீதி. 6:5 வெளிமான் வேட்டைக்காரன் கைக்கும் குருவி வேடன் கைக்கும் தப்புவது போல நீ உன்னை தப்புவித்துக் கொள்

இந்த வசனத்தில் கடன் கொடுத்தவர்கள் வேட்டைக்காரன் வேடன், கடனுக்கு ஜாமீன் கையெழுத்துப் போட்டவர்கள் வெளிமான் குருவி

தேவன் இந்த ஆலோசனையை நமக்கு ஏன் கொடுக்கிறார் என்றால், ஜாமீன் கையெழுத்துப் போட்டு சிக்கிக் கொண்டு தேவனிடத்தில் ஜெபித்தாலும் அதற்குத் தேவன் செவி கொடுக்கமாட்டார்.

**ஈரோட்டிலும், அதின் சுற்றுப்புறங்களிலும் குடியிருக்கும் திருமறை ஆசான் வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்**

*உங்கள் வீடுகளில் நாங்கள் வந்து முழு வேதாகமத்தின் சத்தியங்களை இலவசமாகக் கற்றுத் தர ஆயத்தமாக இருக்கிறோம். நீங்கள் சத்திய வசனங்களைத் தெளிவாகக் கற்றுக்கொள்ள விரும்பினால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்......*

Bro. N. பர்னபாஸ், ஈரோடு.

97883 3264, 90257 76966

# கிறிஸ்துவின் மணவாட்டி

***Rujty woods***

**வே**தாகம எழுத்தாளர்களின்படி, தேவன் எப்போதுமே தம்முடைய மண வாட்டியை எப்படி நடத்த வேண்டுமென்பதை நன்றாகவே அறிந்திருக் கிறார். எசேக்கியேல் பதினாறாம் அதிகாரம், தேவன் தம்முடைய மணவாட்டி யாகிய இஸ்ரவேலுக்கு சித்திரத்தையலாடைய உடுத்தி, சாயந்தீர்ந்த பாத ரட்சைகளைத் தரித்து, கட்ட மெல்லிய புடவையையும், மூடிக்கொள்ளப்பட்டுச் சால்வையையும் கொடுத்து, ஆபரணங்களால் அலங்கரித்து, நெற்றியில் நெற்றிப்பட்டத்தையும், காதுகளில் காதணிகளையும், தலையின் மேல் சிங்காரமான கிரீடம் தரித்தது பற்றியும் பேசுகிறது.

புதிய ஏற்பாட்டுக்குத் திரும்பும்போது கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை தன் மணவாளனாகிய கிறிஸ்துவுக்காக கறைதிரையற்றதாக இருக்க வேண்டுமென்று பவுல் சொல்வதை நாம் பார்க்கமுடியும். கிறிஸ்து தன் மணவாட்டி மீது கொண்டிருந்த அன்பையும், அர்ப்பணிப்பையும் வெளிப் படுத்தும் விதமாக தம்மையே ஒப்புக்கொடுத்தார். இவ்விதமாக அவர் மணவாட்டி மகிமையாகவும் அழகாகவும், கறைதிரையற்றதாகவும் திகழும் படியான வழியை ஏற்படுத்திக் கொடுத்தார்.

நான் சமீபகாலமாக அர்ப்பணிப்பு இல்லாத காரணத்தினாலும், சபையில் சக கிறிஸ்தவர்களோடு ஏற்பட்ட மோதல்களாலும் சபையை விட்டு விலகி வேறு இடங்களில் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றச் சென்றிருக்கிற மக்களோடு நேரடியாகப் பேசிக் கொண்டிருக்கிறேன்.

ஒருவேளை நீங்களும் கூட உங்கள் உண்மையுள்ள நண்பன் இவ்விதமாகச் சொல்லக் கேட்டிருக்கலாம். வாரத்திற்கு ஒரு முறை அருகிலிருக்கும் டீக்கடையில் நண்பர்களை சந்திப்பதினால் எங்களுக்குள் ஐக்கியம் ஏற்படுகிறது, இது முக்கியமான காரியங்களைக் குறித்து விவாதிக்க ஏதுவாயிருக்கிறது. அல்லது ஒருவேளை யாரோ ஒருவர் இப்படிச் சொல்ல நீங்கள் கேட்டிருக்கலாம். நான் அருகிலிருக்கும் மருத்துவமனையில் நானாகவே முன்வந்து கிறிஸ்து எப்படி சேவைச் செய்தாரோ அதுபோல் செய்ய ஆசைப்படுகிறேன், அது தான் என் சபை என்று.

மேற்சொல்லப்பட்ட காரியங்களின் முக்கியத்துவத்தை எவ்விதத்திலும் நான் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. குறிப்பாக, நான் தற்போது வேலை செய்து கொண்டிருக்கிற கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரை சேவையும், சமுதாயப் பணிகளும் அவர்களுடைய கலாச்சாரத்தின் முக்கிய அங்கமாக இருப்பதால் எனக்கு எப்போதும் அதன் மீது பெரிய மரியாதை உண்டு.

ஆயினும், இந்த செயல்களையெல்லாம் சபையானது மரியாதை யாகவும், துல்லியமாகவும் பெண்தோழி அல்லது மணவாட்டியின் தோழி யினுடைய பணிகளாகத்தான் அடையாளங்காண்கிறது - மணவாட்டியின் பணியாக அல்ல. மண வாட்டி மேலிருந்து கீழ்வரை கிறிஸ்துவின் முழு சரீரமா யிருக்கிறது - அதாவது, அது வயதானவர்கள், வாலிபர்கள், ஏழைகள், பணக்காரர் போன்ற அப்பகுதியில் வாழும் தேவனுடைய கிருபையுள்ள விசுவாசப் பிள்ளைகளை உள்ளடக்கியது. இத்தனை வித்தியாசங்கள் இருந்த போதிலும் ஆவிக்குரிய முதிர்ச்சி அடையும்படி ஒருவரையொருவர் ஊக்கப் படுத்தும்படி ஒட்டு மொத்த அங்கத்தினர்களுள் கிறிஸ்துவின் அழகான மணவாட்டியாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தம் மணவாட்டியை கறைதிரையற்றதாக ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்துவின் தீவிர ஆசையை, சபையாகிய நாம் அவருடைய அர்ப்பணிப்பை கனப்படுத்தும் வகையில் வாழ்க்கை வாழ நம்மை ஊக்கப்படுத்த அனுமதிக்க வேண்டும். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். (எபேசியர் 5:25,27).

## நாளும், நடப்பும்

1. இந்தியாவின் கைலாஷ், பாகிஸ்தானின் மலாலாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு.
2. ஆந்திரத்தின் விசாகப்பட்டினத்தை ஹுட் ஹுட் புயல் கடுமையாகத் தாக்கியது.
3. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் அறுபது ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பெய்த பலத்த மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அம்மாநிலத்தை சீர்குலைத்தது.
4. தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கும் திட்டம் விரைவுபடுத்தப்படும் – மத்திய சுகாதாரத் துறை அமைச்சர்.
5. IRNSS செயற்கைக்கோள் அக்டோபர் 16ல் விண்ணில் செலுத்தப்படும் – இஸ்ரோ அறிவிப்பு.
6. ஆசியப் போட்டிகள் கோலகால நிறைவு : – இந்தியா 8வது இடம்.

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## பாடம் - 45 கேட்டலின்படி செய்தல்

**Bro. K. பாஸ்கர்**

**தி**ருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல.

நாம் அநேக விசயங்களைக் கேட்கிறோம், படிக்கிறோம் அதை யெல்லாம் மனதில் வைப்பது இல்லை. அதுபோல கிறிஸ்துவின் வசனங்களைப் பார்க்கிறோம், படிக்கிறோம். ஆனால், இயேசு கூறுவதைச் செய்வதில்லை. அதைப் பற்றி நினைப்பதுமில்லை. ஆனால், ஆண்டவர் கூறுகின்றார். என்னை ஆண்டவரே, ஆண்டவரே என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லு கிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன என்று கேட்கிறார் (லூக். 6:46). அதுபோல இயேசுவின் சகோதரர் யாக்கோபு சொல்கிறார் அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாக மாத்திர மல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் என்கிறார் (யாக். 1:22). எனவே, வசன ரீதியான கிறிஸ்துவின் சபை என்பது குறித்து அறிவதோடு மட்டுமல்ல அதன்படி செய்கிறவர்களாக இருக்க இம்மாதம் கட்டுரையைப் படிப்போம்.

### I. கேட்டலின் படி செய்ய இயேசுவின் போதனை

நாம் நிறைய உபதேசங்களைக் கேட்கிறோம். படிக்கிறோம் அதெல்லாம் கிறிஸ்துவின் போதனையா , அதை அப்போஸ்தலர்கள் வலியுறுத்துகின்றார் களா? ஆதி கிறிஸ்தவர்கள் அதைக் கைக் கொண்டார்களா? என்று சிந்திக்காமல் விட்டுவிடுகின்றோம். நாம் வசனத்தைக் கேட்டு அதின்படி செய்ய இயேசு ஒரு உவமையைப் போதித்தார். அது என்ன என்று பார்ப்போம். ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனே அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரித்து பெருவெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப் படுவான். பெருமழை சொரித்து பெருவெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதினபோது அது விழுந்தது, விழுந்து முழுவதும் அழிந்தது என்றார். (மத் 7:24-27) நாம் ஒவ்வொருவரும் ஒரு ஆவிக்குரிய வீட்டைக் கட்டிக் கொண்டு வருகின்றோம். ஆனால், இயேசு சொல்லியடி கட்டுகிறோமா? என்று பார்க்க வேண்டும்.

### II. இரண்டு அஸ்திபாரங்கள்


உலகில் பல அஸ்திபாரங்கள் உண்டு. சிலர் சிலை வழிபாடு என்ற அஸ்தி பாரத்தின் சீது தன் வாழ்க்கையைச் செலவழிக்கிறார்கள். சிலர் தங்கள் பாரம்பரிய சபை மீது அஸ்திபாரம் போடுகின்றனர். இன்னும் சிலர் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்து பரவசத்தால், பற்பல வார்த்தைளால் ஆராதிக்கின்றனர். இவையெல்லாம் கிறிஸ்துவின் வசனப்படி செய்கின்றனரா என்று பார்க்க வேண்டும். கிறிஸ்துவின் உபதேசப்படி இல்லையென்றால் அந்த அஸ்தி பாரமெல்லாம் மணல் மேல் போடப்பட்டதாகும். நாம் நம்முடைய ஆவிக்குரிய


வீட்டை ஞானமாக கிறிஸ்து சொன்னபடி கட்ட வேண்டும். அதற்கு அஸ்தி பாரமாக கிறிஸ்துவின் வசனத்தை வைத்துக் கட்ட வேண்டும். போடப்பட்டிருகிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (1 கொரி. 3:11) அவருடைய வசனமே நமக்கு அஸ்திபாரமாக உள்ளது. புத்திமான் இவைகளைக் கேட்டு அறிவில் தேறுவான். (நீதி. 1:5). ஞானமுள்ளவனுக்குப் போதகம் பண்ணு அவன் ஞானத்தில் தேறுவான். (நீதி. 9:9). ஆனால், புத்தியில்லாதவர்கள் கேட்டது சத்தியம் என்று நினைத்து தொடர்ந்து விக்கிரக ஆராதனை செய்வார்கள். ஆனால், வசனம் கூறுகின்றது விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள் என்று (1 கொரி. 10:14). புத்தியில்லாதவர்கள் நிறைய வசனங்களைக் கேட்டும், படித்தும் தங்கள் பாரம் பரியத்தை விடமாட்டார்கள். ஆனால், இயேசு உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள் என்று கேட்கிறார். (மத்தேயு 15:3) இவையெல்லாம் மணலின் மேல் அஸ்திபாரமிடுவதாகும் தேவன் புத்தி யில்லாதவர்களை அறிகின்றார் (சங். 69:5). பேதையர் புத்தியில்லாததைச் செய்கின்றனர். (நீதி. 14:18) பழைய ஏற்பாட்டில் சவுல் என்ற இராஜாவிடம் தேவன் இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்த போது அவர்களுக்கு வழியை மறித்த அமலேக்கியரை முற்றிலுமாக அழித்து விடு என்றார். சவுலும் இந்த வார்த்தை களைக் கேட்டு அமலேக்கியரை அழித்தான். ஆனால், அவர்களுக்குண்டான கொழுமையான ஆடு, மாடுகளைக் கொல்லாமல் உயிரோடு பிடித்துக் கொண்டு வந்தான். தேவன் இந்தக் காரியத்தினிமித்தம் அவனை ராஜாவாக இராத படிக்கு புறக்கணித்துத் தள்ளினார். (1 சாமு. 15:2-11). அவன் தன் வீட்டை மணலின் மேல் அஸ்திபாரம் போட்டுக் கட்டினான். நாம் நம்முடைய ஆவிக்குரிய வீட்டை கன்மலையின் மேல் கட்டுவோமாக!.


## III. இரண்டு அஸ்திபாரங்களுக்கும் வந்த முடிவு

ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு முடிவை தேவன் வைத்துள்ளார் (பிலி. 3:1-8) நம்மில் ஒவ்வொருவரும் தேவனுக்கு முன்பாகக் கணக்குக் கொடுக்க வேண்டும் (ரோமர் 14:12) மாம்சமான யாவர்மேலும் முடிவு வரும் (ஆதி. 6:13) அது நம்முடைய ஆவிக்குரிய வீட்டிற்கும் முடிவு வரும். நாம் ஒவ்வொரு வரும் நமது அஸ்திபாரத்தை பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளினாலே கட்டுகிறோம். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால் அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்து போனால் அவன் நஷ்டமடைவான் (1 கொரி. 3:12-15). நாம் கிறிஸ்துவின் வசனப்படி நம்முடைய ஆவிக்குரிய வீட்டைக் கட்டினால் கடைசி நாட்களில் நஷ்டமடைவதில்லை. மனுஷனுக்குச் செம்மை யாய்த் தோன்றுகிற வழியுண்டு அதின் முடிவோ மரண வழிகள் (நீதி. 16:25) விக்கிரக ஆராதனை, பாரம்பரிய வழி எல்லாம் கிறிஸ்துவின் வசனப்படி இல்லாத மணலின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டது. உலகத்தின் முடிவில் எல்லாம் அழியும். எனவே, கிறிஸ்துவின் வசனப்படி ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்று கூடுவோம். (அப். 20:7) ஒவ்வொரு ஞாயிறு தோறும் அப்பம் பிட்போம் (அப். 2:42). அந்த நாளில் இசைக்கருவி இல்லாமல் பாடுவோம் (மத்தேயு 26:30) அப்போது வரவுக்குத்தக்கக் காணிக்கை கொடுப்போம் (1 கொரி. 16:1,2) நாம் ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருப்போம் (1 தெச. 5:17) கிறிஸ்துவின் வசனத்தை மட்டுமே பிரசங்கிப்போம் (1 பேதுரு 4:11) இவைகள் கன்மலையின் மேல் கட்டப்பட்ட வீடாகும், கடைசி நாளில் நிலைத்திருக்கும். ஆமென்!

## வேதாகம கருத்தரங்கின் போது...























வேதாகம கருத்தரங்கில்...












Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால்
செலவிற்கு
பணம்
அனுப்பி
இந்நூல்களைப்
பெற்றுக்
கொள்ளலாம்

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு . இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.